**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வந்தவாசி திருவண்ணாமலை மாவட்டம்</u>**

முன்னிலை - **திரு.வை.அரங்கசாமி, பி.எஸ்.சி., பி.எல்.,**
**நீதித்துறை நடுவர், வந்தவாசி.**

2026ம் ஆண்டு மே மாதம் 14ம் நாள் வியாழன் கிழமை

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 588/2025</u>**

**<u>C.N.R. No. TNTM15- 001171-2024</u>**

**<u>அரசுக்காக</u>:-**
காவல் ஆய்வாளர்,
பொன்னூர் காவல் நிலையம்,
குற்ற எண். 18/2019 **... குற்றமுறையிடுபவர்**

**-எதிர்-**

**1. கோதண்டராமன், (வயது சுமார் 43/2025)**
த/பெ. ஏழுமலை கவுண்டர்,
ரோடு தெரு, வங்காரம் கிராமம்,
வந்தவாசி தாலுக்கா,
திருவண்ணாமலை மாவட்டம். **... எதிரி**

<u>CASE SUMMARY AS PER THE CIRCULAR OF HON'BLE HIGH COURT, MADRAS</u>
IN ROC.No.814/2020/RG/F1, Dated : 07.04.2021

| | | |
|---|---|---|
| 1 | ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். | **C. C. No.588/2025** |
| 2 | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | **<u>அரசுக்காக</u>:-**<br>காவல் ஆய்வாளர்,<br>பொன்னூர் காவல் நிலையம்,<br>குற்ற எண். 18/2019. |
| 3 | எதிரிகளின் பெயர், வயது, தந்தையின் பெயர் மற்றும் முகவரி | **1. கோதண்டராமன், (வயது சுமார் 43/2025)**<br>த/பெ. ஏழுமலை கவுண்டர்,<br>ரோடு தெரு, வங்காரம் கிராமம்,<br>வந்தவாசி தாலுக்கா,<br>திருவண்ணாமலை மாவட்டம். |
| 4 | எதிரிகளின் தொழில் | விவசாயம் |
| 5 | குற்ற நிகழ்வு நாள் | 14.01.2019 |
| 6 | புகார் அளிக்கப்பட்ட நாள் | 15.01.2019 |
| 7 | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | 25.02.2019 |

| | | |
|---|---|---|
| 8 | எதிரிகள் ஜாமினில் விடுவிக்கப்பட்ட நாள் | 25.02.2019 |
| 9 | விசாரணை தொடங்கப்பட்ட நாள் | 13.03.2026 |
| 10 | விசாரணை முடிக்கப்பட்ட நாள் | 10.04.2026 |
| 11 | நீதிமன்றத்தின் முடிவு | **1) எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு அரசு தரப்பில் தெளிவான சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக தீர்மானித்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரி மீது சுமத்தப்பட்ட இதச பிரிவுகள் 279, 304(A)-ன் கீழான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் எதிரி குற்றவாளி இல்லை என முடிவு செய்து கு.வி.மு.ச. பிரிவு 255(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**<br><br>**2) மேலும் இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் செய்யவில்லை. அதனால் வழக்கு சொத்து குறித்து உத்தரவு எதுவும் இல்லை.**<br><br>**3) எதிரிகள் தரப்பில் எழுதிக் கொடுக்கப்பட்ட பிணைமுறி இவ்வழக்கின் மேல்முறையிட்டு காலத்திற்கு பிறகு இரத்தாகும் என்று உத்தரவிடப்படுகிறது.** |
| 12 | எதிரிகளுக்கு தீர்ப்பின் நகல்/ முடிவு தெரிவிக்கப்பட்டதா | ஆம் |
| 13 | காலதாமதத்திற்கான காரணம்:- | இறுதியறிக்கை - அன்று தாக்கல் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தில் 17.09.2025ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 13.03.2026 அன்று இந்த நீதிமன்றத்தால் விசாரணை தொடங்கி, 14.05.2026 அன்று தீர்ப்பு பகரப்பட்டது. அரசு தரப்பில் எதிரிகளுக்கு அழைப்பாணையை சார்வு செய்வதிலும், சாட்சிகளுக்கு அழைப்பாணையை |

| | | |
|---|---|---|
| | | சார்வு செய்து முன்னிலைப்படுத்தி விசாரணை செய்வதிலும் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. இந்த நீதிமன்றத்தின் தரப்பில் நியாயமற்ற தாமதம் எதுவும் இல்லை. |

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் 17.09.2025ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக 12.05.2026ம் தேதி இறுதி விசாரனைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-I திரு.D.கிரகராஜ் அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.P.கீர்த்தி, அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்டும் ஆவணங்களை ஆராய்ந்தும் இறுதி பரிசீலனைக்கு பின் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்....

## <u>தீர்ப்புரை</u>

### <u>இறுதியறிக்கையின் சுருக்கம் :</u>

பொன்னூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வங்காரம் காமராஜர் நகர், மாரியம்மன் கோயில் தெருவில் வசிக்கும் இவ்வழக்கின் வாதி தண்டபாணி என்பவரின் தந்தை காசி கவுண்டர் என்பவர் கடந்த 14.01.2019 ம் தேதி இரவு 19.00 மணிக்கு மாம்பட்டு கிராமத்திற்கு சென்று மளிகை பொருட்கள் வாங்கிவர வந்தவாசி To சேத்பட் ரோடு ஆவணவாடி கூட்ரோடு அருகே இடதுபக்க ஓரமாக நடந்து சென்றபோது, தனக்கு பின்னால் வந்த எதிரி கோதண்டராமன் என்பவர் TN 25 AV 1141 Hero Splendor Plus என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து வாதியின் தந்தை காசி கவுண்டர் என்பவர் மீது மோதியதில் முகத்தில் காயம் ஏற்பட்டு மூக்கில் இரத்தம் வந்ததால் உடனே சாட்சி 1 மற்றும் சாட்சி 2 இருசக்கர வாகனத்தில் அமரவைத்துக்கொண்டு வந்தவாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்து மேல்சிகிச்சைக்காக செங்கல்பட்டு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை சிகிச்சை அளித்தும் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். எனவே, எதிரி மீது இதச பிரிவு 279, 304(A)-ன் கீழ் பொன்னூர் காவல் நிலைய ஆய்வாளர் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

### <u>2. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு குற்றச்சாட்டு வனைதல்-</u>

இறுதி அறிக்கையின் பரிசீலனையின் பேரில் வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையான போது எதிரிக்கு அரசு தரப்பில் தாக்கலான ஆவணங்களின் நகல்களை கு.வி.மு.ச. பிரிவு 207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால

அவகாசத்திற்கு பிறகு எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 279, 304(A)-ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு குற்றம் குறித்து வினவிய போது எதிரி குற்றவாளி இல்லை என மறுத்தார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்திரவிடப்பட்டது.

## 3. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம் பின்வருமாறு.

அ.சா.1 திரு.தண்டபாணி தனது சாட்சியத்தில், தான் கட்டிட வேலை செய்கிறேன் என்றும், தற்போது தன்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், அந்த புகார் தான் கொடுத்ததுதான் என்றும், அந்த புகார் அ.த.சா.ஆ 1 ஆகும் என்றும், இந்த வழக்கு விபத்தில் இறந்துபோன நபர் காசி எனது தந்தை ஆவார் என்றும், சுமார் 7 வருடங்களுக்கு முன்பு தேதி ஞாபகம் இல்லை என்றும், போகிபண்டிகை அன்று தான் வீட்டில் இருந்தபோது தனது தகப்பனார் ஆவணவாடி எதிர்மேடு என்ற இடத்தில் தன் தந்தை நடந்து சென்று கொண்டிருந்தபோது எதிரே வந்த இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக தனது சித்தப்பா ஆறுமுகம் என்வர் தனக்கு தகவல் சொன்னார் என்றும், தனது சித்தப்பா காயம்பட்ட தனது தந்தையை வந்தவாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அழைத்துச்சென்று சேர்த்தார் என்றும், தான் சென்று பார்த்தேன் என்றும், அவர் கவலைக்கிடமாக இருந்தார். பின்னர் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர் என்றும், அங்கு அவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள் என்றும், இது சம்மந்தமாக புகார் கொடுத்தேன் என்றும், போலிசார் விசாரணை செய்தார்கள் என்றும், சாட்சியமளித்துள்ளார்.

அ.சா.3. திரு. டேவிட் ராஜ்குமார், தனது சாட்சியத்தில், தான் தற்போது பொன்னூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், தான் கோப்புகளின் அடிப்படையில் கூடுதல் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 15.01.2019ம் தேதி அ.சா.1னிடம் புகார் பெற்று நிலைய குற்ற எண்.18/2019 இதச பிரவு 279, 304(A)- கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார் என்றும், முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ 2 ஆகும் என்றும், சம்பவ சாட்சிகளாக தண்டபாணி, மணிகண்டன், ஆறுமுகம், ஏழுமலை, உத்திரபாண்டி ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பாலகிருஷ்ணன், ராஜி முன்னிலையில் சம்பவ இடத்தில் வைத்து பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும், அவை முறையே அ.த.சா.ஆ 3 என்றும், அ.த.சா.ஆ 4 ஆகும் என்றும், இறந்துபோன நபரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை அறிக்கை பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் தயாரிக்கப்பட்டது என்றும், அது அ.த.சா.ஆ.5 என்றும், இறந்துபோன நபருக்கு சடல கூராய்வு செய்த மருத்துவரை விசாரணை செய்து பிரேத கூராய்வு அறிக்கை பெறப்பட்டுள்ளது என்றும், அந்த சடல கூராய்வு அறிக்கை அ.த.சா.ஆ.6 ஆகும் என்றும், இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனம்

டி.என்.25 எ.வி 1141 ஹீரோ ஹோண்டா என்கிற வாகனத்தை அதன் கோதண்டராமனின் ஓட்டுநர் உரிமத்துடன் ஆஜர்படுத்த மோட்டார் வாகன ஆய்வாளர் மோகன் அவர்கள் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டு, ஆய்வறிக்கை அ.த.சா.ஆ 7 வழங்கப்பட்டது என்றும், அதில் வாகன விபத்து எந்திர கோளாறினால் ஏற்படவில்லை என்றும், முன்புற வலது மற்றும் இடது இன்டிகேட்டர்ஸ் உடைந்த நிலையில் இருந்தது என்றும், வலது பம்பர் வலது புட்ரெஸ்ட் சேதம் ஏற்பட்டிருந்தது என்றும், பின்புற இன்டிகேட்டர் உடைந்து இருந்தது என்றும், ஆண்டில்பார் உடைந்திருந்தது என்றும், எதிரி 15.02.2019ம் தேதி கைது செய்யப்பட்டு நிலைய ஜாமினில் விடுவிக்கப்பட்டார் என்றும், வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது இதச பிரவு 279, 304(A) கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியமளித்துள்ளார்.

4. இத்துடன் அரசு தரப்பு சாட்சி முடித்துக்கொள்ளப்பட்டு எதிரிக்கு எதிராக தோன்றிய அரசு தரப்பு சாட்சிகளின் சங்கதிகளை தொகுத்து எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ) -ன் கீழ் வினவியபோது, எதிரி சாட்சியை பொய்சாட்சி எனக்கூறி மறுத்தார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என சொன்னார்கள். ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. அரசு தரப்பில் அ.சா. 1 முதல் அ.சா.3 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.த.சா.ஆ. 1 முதல் அ.த.சா.ஆ.7 வரையான சான்றவாணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**6. <u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

**அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யபட்டுள்ளதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையாகும்.**

7. பொன்னூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வங்காரம் காமராஜர் நகர், மாரியம்மன் கோயில் தெருவில் வசிக்கும் இவ்வழக்கின் வாதி தண்டபாணி என்பவரின் தந்தை காசி கவுண்டர் என்பவர் கடந்த 14.01.2019 ம் தேதி இரவு 19.00 மணிக்கு மாம்பட்டு கிராமத்திற்கு சென்று மளிகை பொருட்கள் வாங்கிவர வந்தவாசி To சேத்பட் ரோடு ஆவணவாடி கூட்ரோடு அருகே இடதுபக்க ஓரமாக நடந்து சென்றபோது, தனக்கு பின்னால் வந்த எதிரி கோதண்டராமன் என்பவர் TN 25 AV 1141 Hero Splendor Plus என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து வாதியின் தந்தை காசி கவுண்டர் என்பவர் மீது மோதியதில் முகத்தில் காயம் ஏற்பட்டு மூக்கில் இரத்தம் வந்ததால் உடனே சாட்சி 1 மற்றும் சாட்சி 2 இருசக்கர வாகனத்தில் அமரவைத்துக்கொண்டு வந்தவாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்து மேல்சிகிச்சைக்காக செங்கல்பட்டு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை

சிகிச்சை அளித்தும் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். எனவே, எதிரி மீது இதச பிரிவு 279, 304(A)-ன் கீழ் குற்றம் புரிந்துள்ளார் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

8. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும்போது அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா. 3 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.6 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, எதிரியை தண்டிக்கவேண்டும் என வாதிட்டுள்ளார்.

9. எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும்போது இவ்வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையான சாட்சிகள் ஒருவருக்கொருவர் முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார்கள். எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என வாதிட்டார்.

10. இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 திரு. தண்டபானி இறந்துபோன காசியின் மகன் ஆவார். அவர் தனது சாட்சியத்தில், சுமார் ஏழு வருடங்களுக்கு முன்பு தேதி ஞாபகம் இல்லை என்றும், போகி பண்டிகை அன்று தான் வீட்டில் இருந்தபோது, தனது தகப்பனார் ஆவணவாடி எதிர்மேடு என்ற இடத்தில் தன் தந்தை நடந்து சென்றுகொண்டிருந்தபோது, இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டுவிட்டதாக தனது சித்தப்பா ஆறுமுகம் போன் மூலம் தகவல் சொன்னதாகவும் பின்னர் தனது தந்தையை வந்தவாசி அரசு மருத்துவமனையில் சென்று பார்த்ததாகவும் பின்னர் மேல் சிகிச்சைக்காக செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிசிக்சையில் இருந்தவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக சாட்சியமளித்துள்ளதை பார்க்கும்போது, வழக்கு விபத்து சம்பவத்தினை தனது சித்தப்பா ஆறுமுகம் மூலம் கேள்விப்பட்டு புகார் அ.த.சா.ஆ.1 கொடுத்ததாக தெரியவருகிறது.

இந்நிலையில் விபத்தினை கண்ணுற்று விபத்தில் காயமடைந்த நபரை சிகிச்சைக்கு சேர்த்ததாக அ.சா.1 கூறும் பட்டியல் சாட்சி 2 ஆறுமுகத்தின் சாட்சி இவ்வழக்கில் இன்றியமையாதது ஆகும். அ.சா.2 ஆறுமுகத்தின் சாட்சியை பரிசீலிக்கும் போது,

அ.சா.2 திரு. ஆறுமுகம் தனது சாட்சியத்தில், தான் விவசாய வேலை செய்து வருகிறேன் என்றும், இவ்வழக்கில் இறந்துபோன நபர் காசி ஆவார் என்றும், அ.சா.1 தண்டபாணி அவரது மகன் என்றும், சுமார் 6, 7 வருடங்களுக்கு முன்பு தனது அண்ணன் பைக் விபத்தில் இறந்துவிட்டார் என்றும், தேதி ஞாபகம் இல்லை அந்த விபத்து நடந்த நாள்

போகி பண்டிகை என்றும், அன்று மாலை 6.00 மணி அளவில் மாம்பட்டு கிராமம் சந்திப்பில் பொங்கல் பண்டிகைக்கு பொருட்கள் வாங்க சென்ற நபரை நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள எதிரி இருசக்கர வாகனத்தில் வந்து நடந்துவந்துக்கொண்டிருந்த தனது அண்ணன் மீது இடித்துவிட்டார் என்றும், தனது அண்ணன் கீழே விழுந்து முகத்தில் அடிப்பட்டுவிட்டது என்றும், தான் அவரை வந்தவாசி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துவந்து பின்பு செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச்சென்றோம் என்றும், அங்கு இரவு 11.30 மணியளவில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்றும், அ.சா.1க்கு மேற்படி விபத்து சம்மபந்தமாக தான் தான் தகவல் சொன்னேன் என்றும், போலிசார் விசாரணைக்கு ஒத்துரைத்து சாட்சியமளித்துள்ளபோதும், எதிரியின் அதிவேகமும், அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது என்று சாட்சியமளிக்கவில்லை.

மேலும், அ.சா.2 திரு. ஆறுமுகம், தனது குறுக்கு விசாரணையில், சம்பவம் நடந்த சமயத்தில் நான் எங்கு இருந்தேன் என்றால், ஆவணவாடியில் இருந்தேன். நான் விபத்தை நேரடியாக பார்தேனா என்றால் பார்க்கவில்லை. விபத்திற்கு பிறகு தான் சம்பவ இடத்திற்கு வந்தேன் என்று தனது முதல் விசாரணைக்கும் முரணாக விபத்து சம்பவத்தினை நேரில் பார்க்கவில்லை என்று சாட்சியமளித்துள்ளார்.

மேலும், அ.சா.2 திரு. ஆறுமுகம், தனது போலிசார் விசாரணையில், கடந்த 14.01.2019ம் தேதி ஆவணவாடி கூட்ரோடு அருகில் அருகில் தனது அண்ணனுக்கு விபத்து ஏற்பட்டு மூக்கில் இரத்தம் வந்தது என தகவல் தெரிந்து உடனே என் அண்ணன் மகன் தண்டபானியும், என் அண்ணன் மருமகன் மணிகண்டன் என்பவரும் வந்து அடிபட்ட தன் அண்ணனை வந்தவாசி அரசு மருத்துவமனைக்கு சேர்த்ததாக சாட்சியமளித்துள்ளார்.

ஆனால், அ.சா.1 தனது சாட்சியத்தில் விபத்தில் காயமடைந்த தந்தையை அ.சா.2 ஆறுமுகம் மருத்துவமனையில் சேர்த்ததாக கூறியுள்ளார்.

இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரி தாக்கல் செய்த இறுதி அறிக்கையுடன் தாக்கல் செய்த சாட்சி பட்டியலில் விபத்து சம்பவத்தினை நேரில் பார்த்த சாட்சிகள் யாரையும் முன்னிறுத்தப்படவில்லை என்பது தெரியவருகிறது.

எனவே, அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகளை விசாரித்துவிட்டு மற்ற சாட்சிகளை ஒதுக்கிவிட்டு அ.சா.3 புலன் விசாரணை அதிகாரியை விசாரித்து அ.த.சா.ஆ.2 முதல் அ.த.சா.ஆ. 7 வரையான சான்றாவணங்களை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

பொதுவாக விபத்து வழக்குகளில் விபத்தினை கண்ணுற்ற சாட்சிகள் மூலம் எதிரியின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையால்தான் விபத்து நடந்தது என்றும், அந்த விபத்தினால் காயம்பட்ட நபருக்கு இறப்பு ஏற்பட்டது என்று அரசு தரப்பில் நிரூபிக்க வேண்டியது அவசியமாகும். ஆனால், இவ்வழக்கில் விபத்தில் காசி என்பவர் இறப்பிற்கு எதிரியின் அதிவேகமும் மற்றும் அஜாக்கிரதையால் தான் மரணம் ஏற்பட்டது என்று அரசு தரப்பில் தகுந்த சாட்சிகள் மூலம் நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

எனவே, அரசு தரப்பில் எதிரிக்கு எதிராக சாட்டப்பட்ட குற்றச்சாட்டு தகுந்த சாட்சிகள் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

**முடிவாக**

**1) எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு அரசு தரப்பில் தெளிவான சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக தீர்மானித்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரி மீது சுமத்தப்பட்ட இதச பிரிவுகள் 279, 304(A)-ன் கீழான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் எதிரி குற்றவாளி இல்லை என முடிவு செய்து கு.வி.மு.ச. பிரிவு 255(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

**2) மேலும் இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் செய்யவில்லை. அதனால் வழக்கு சொத்து குறித்து உத்தரவு எதுவும் இல்லை.**

**3) எதிரிகள் தரப்பில் எழுதிக்கொடுக்கப்பட்ட பிணைமுறி இவ்வழக்கின் மேல்முறையிட்டு காலத்திற்கு பிறகு இரத்தாகும் என்று உத்தரவிடப்படுகிறது.**

இத்தீர்ப்பானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு பின்னர் இன்று 2026ம் ஆண்டு மே திங்கள் 14ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ARANGASAMY VAIYAPURI

Digitally signed by ARANGASAMY VAIYAPURI
Date: 2026.05.14 05:52:25 +0530

**நீதித்துறை நடுவர்,**

**வந்தவாசி.**

**<u>அரசுத் தரப்பு சாட்சிகள்</u>**

| | |
|---|---|
| அ.த.சா.1 | திரு. தண்டபானி - புகார்தாரர் |
| அ.த.சா.2 | திரு. ஆறுமுகம் |
| அ.த.சா.3 | திரு. டேவிட் ராஜ்குமார் |

**<u>அரசுத் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | |
|---|---|
| அ.த.சா.ஆ. 1. | புகார் |
| அ.த.சா.ஆ. 2 | முதல் தகவல்  அறிக்கை |
| அ.த.சா.ஆ. 3 | பார்வை மகசர் |
| அ.த.சா.ஆ. 4 | மாதிரி வரைபடம் |
| அ.த.சா.ஆ. 5 | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.த.சா.ஆ. 6 | சடல கூராய்வு அறிக்கை |
| அ.த.சா.ஆ. 7 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை |

**<u>சான்று பொருட்கள் -</u>**

சா.பொ. இல்லை

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள்  மற்றும் சான்றாவணங்கள்</u>** - இல்லை

ARANGASAMY VAIYAPURI

Digitally signed by ARANGASAMY VAIYAPURI
Date: 2026.05.14 05:52:39 +0530

**நீதித்துறை நடுவர்,**

**வந்தவாசி.**

**<u>குறிப்பு.</u>**

1. எந்த சாட்சியும் 3 கேட்பு தினங்களுக்கு மேல் விசாரணை செய்யாமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. இவ்வழக்கின் முடிவு குறித்து காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.